19.01.2023

அ.வ.எண்.76/2017

அன்னாள் ஜோஸ்பின் (P.W.1)

குறுக்கு விசாரணை :

1. பிரதிவாதி எனது சகோதரி ஆவார். அவர் சென்னையில் ஆசிரியராக வேலை பார்த்து ஒய்வு பெற்ற பிறகும் அங்கு தான் வசித்து வருகிறார். விடுமுறை மற்றும் விஷேச நாட்களில் இங்கு வந்து செல்வார். நான் விலைக்கு வாங்கிய சொத்தில் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். நான் விலைக்கு வாங்கிய ஆவணத்தில் வழிப்பாதை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி விலைக்கு வாங்கிய ஆவணமான 609/1998-இலும் மேற்படி இடம் வழிப்பாதைக்காக வாங்கியது என்று கூறவில்லை என்றால் சரிதான். எ பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கம் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி சொத்திற்கு செல்வதற்கு எ பட்டிகை வழியாக வழிப்பாதை இல்லை என்றால் சரியல்ல உண்டு. எ பட்டிகை சொத்து முழுவதையும் சுற்றி சுற்றுசுவர் கட்டி அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல எனது சொத்தும் பிரதிவாதியின் சொத்தையும் சேர்த்து சுற்றுசுவர் கட்டியுள்ளேன். எ பட்டிகை சொத்தில் தெற்கு பக்கம் உள்ள சுற்றுசுவரில் 2 இடத்தில் 2 செட்டு அமைத்து நாய் மற்றும் குருவிகள் வளர்த்து வருகிறீர்கள் என்றால் 1 சிறிய செட்டு உள்ளது. அதில் ஒரு சிறு நாய் வளர்த்து வருகிறேன்.

2. நான் வீடு கட்ட வாங்கிய அனுமதியில் வழக்கு பி பட்டிகை சொத்து முழுவதும் வழிப்பாதை என்று கூறி வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பி பட்டிகை சொத்தில் தெற்கு பக்கம் பாதி பகுதி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பாதி இடம் வழிப்பாதை என்று சொல்லி பஞ்சாயத்திடம் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. மேற்படி பிரதிவாதிக்பகு பாத்தியப்பட்ட பாதி இடத்தை நான் வழிப்பாதை என்று பொய்யாக கூறி அனுமதி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் மேற்படி பி பட்டிகை சொத்து முழுவதையும் நானும் பிரதிவாதியும் பாதைக்காக தான் வாங்கினோம். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு செல்வதற்கு பிரதிவாதி எ பட்டிகை சொத்து வழியாக செல்வதற்கு அனுமதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பி பட்டிகை சொத்தில் சுற்றுசுவரோ வேறு எந்த தடையும் இல்லை. நாங்கள் மேற்படி எ

பட்டிகை சொத்து வழியாக பிரதிவாதி செல்வதை நான் தடுத்ததால் பிரதிவாதி 1474/2016-இன் மூலம் வழிப்பாதைக்காக மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்ட சொத்தை வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இடத்தை பிரதிவாதி வாங்கிய பின்பு தான் பி பட்டிகை சொத்தை அடைக்க வந்தார்கள். எப்போது எந்த தேதியில் அடைக்க வந்தார்கள் என்றால் 29.05.2017 அன்று அடைக்க வந்தார்கள். மேற்படி பாதையை அடைக்க வந்தது சம்மந்தமாக காவல்துறையில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

3. பி பட்டிகை சொத்தில் பிரதிவாதியின் சொத்தையும் சேர்த்து கேட் போட்டது எப்போது என்றால் சொத்து வாங்கியவுடன் பிரதிவாதியின் சம்மதத்துடன் போட்டோம். இரண்டு பேரும் சேர்ந்து தான் போட்டோம். 29.05.2017 அன்று பிரதிவாதி பாதையை அடைக்க வந்தார் என்று வழக்கு மூலம் உருவாக்குவதற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 22.04.2017 அன்று நான் பி பட்டிகை சொத்தில் கேட் அமைப்பது தெரிந்து சென்னையில் இருந்து வந்து என்னிடம் கேட்டார்கள் என்றால் சரியல்ல. சொத்தில் கால் வைத்ததால் காலை வெட்டிவிடுவோம் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. 05.05.2017 அன்று கருங்கல் காவல்நிலையத்தில் ஒரு புகார் மனு என்மீது கொடுத்தார்கள் என்றால் சரியல்ல 02.05.2017 அன்று கொடுத்தார்கள். போலீசார் விசாரிக்க வந்தார்களா என்றால் வந்தார்கள். காவல்நிலையத்தில் வைத்து விசாரணையில் இரண்டு பேரும் சொத்தை அளந்து கொள்ளுமாறு கூறி னார் என்றால் விசாரணைக்கு நான் செல்லவில்லை அந்த மாதிரி முடிவு எடுக்கவில்லை. பிரதிவாதி சொத்தை அளப்பதற்கு செல்லான் கட்டினார் என்றாலும் ஆனால் நான் பொய்யான வழக்குமூலத்தை உருவாக்கி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வழக்கு பி பட்டிகை சொத்தில் பாதி பகுதி அவருக்கு உரிமைப்பட்டது என்று கூறி எதிர்கோரிக்கை தாக்கல் செய்தார் என்றால் தெரியும்.

4. வழக்கு பி பட்டிகை சொத்தில் பாதி பகுதி தெற்கு பக்கம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்டது என்பதால் மேற்படி பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல. இரண்டு பேரும் சேர்ந்து வாங்கினோம். இரண்டு பேரும் மேற்படி பாதையை பயன்படுத்துவதற்காக தான் பொதுவாக வாங்கினோம். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வழக்கு பி பட்டிகை சொத்தில் பாதி பகுதியை ஆக்கிரமிப்பு செய்வதற்காக பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. ஆகையால் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கை அனுமதித்து என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல., பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை எக்காலத்திலும் எனக்கு விட்டுக்கொடுப்பதாக கூறினார் என்று சொன்னால் சரியல்ல.